www.Padasalai.Net www.Trbtnpsc.Com

மயிலாடுதுறை

**A**

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

11210

## பதினொன்றாம் வகுப்பு

**நேரம்: 3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்:90**

பகுதி – I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **14x1=14**

1. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ________
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
   இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு
2. விசித்திரமான தொழில் செய்வது
   அ) வாய்க்கால் ஆ) மழை இ) அலைகடல் ஈ) புல்
3. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார்? யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) மன்னர் அமுதவல்லியிடம் ஈ) அமைச்சர் மன்னரிடம்
4. தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
5. கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும்
   காலத்தால் சாகாத தொல்கனிமங்கள் – அடிமோனையைத் தெளிவு செய்க.
   அ) கபாடபுரங்களை – காவுகொண்ட ஆ) காலத்தால் – கனிமங்கள்
   இ) கபாடபுரங்களை – காலத்தால் ஈ) காலத்தால் – சாகாத
6. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ________ என்பதாகும்.
   அ) தான் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) நூல்
7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?
   அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
   இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
8. 'தா' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்று யாது?
   அ) தந்தான் ஆ) தந்த இ) தந்துவிட்டான் ஈ) தந்தவன்
9. ஆசிரியராக்கினார் – இதன் பகுதி
   அ) ஆக ஆ) ஆசிரியராக்கு இ) ஆசிரி ஈ) ஆசி
10. இவற்றை எரித்தால் போதும் – ஓர் இனத்தை அழித்து விடலாம்.
    அ) துணிகளை ஆ) நூல்களை இ) உடைமைகளை ஈ) ஆவணங்களை
11. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
    அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்
12. சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் இசை அமைக்க இளையராஜா எடுத்துக்கொண்ட காலம்
    அ) 6 மாதங்கள் ஆ) 15 நாள்கள் இ) 13 நாள்கள் ஈ) 16 நாள்கள்
13. 'யானை டாக்டர்' என்னும் குறும்புதினத்தின் ஆசிரியர் ________
    அ) எஸ். இராமகிருஷ்ணன் ஆ) ஜெயமோகன்
    இ) சிவராமன் ஈ) சு. வேணுகோபால்
14. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.
    அ) அன் – வந்தனன் ஆ) இன் – முறிந்தது
    இ) கு – காண்குவன் ஈ) அன் – சென்ற

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. 'வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u>' – அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன ?
16. காவடிச்சிந்து என்பது யாது ?
17. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார் ?
18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை ?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன் ?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது ?
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார் ?

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) பொதுச் சிறப்பு ஆ) உழுதுழுது
24. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
    அ) வேண்டுகின்றேன் ஆ) பிரிந்தோர்
25. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    நேற்று ஏன் வந்த பையின் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியாதா ?
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    குரை, குறை
27. வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப்புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
    நஞ்சிருக்கும்.
29. விடைக்கேற்ற வினாவை எழுதுக.
    திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு.போப்.
30. கலைச்சொல் எழுதுக.
    அ) Globalisation ஆ) Cultural Elements

## பகுதி – III

### பிரிவு – 1

ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2x4=8

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மாணவர்களின் பண்புநலன்களைக் கூறுக.
33. சிங்கி பெற்ற பரிசுப் பொருள்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை ?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2x4=8

35. மூன்றாம் வகை கவிஞர் பற்றி இந்திரன் கூறுவதை விவரி.
36. மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
38. தாமஸிகம் என்றால் என்ன ?

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3x4=12**

39. சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விவரி.

(அல்லது)

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.**

40. **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக:**

அ) தனிமொழி – அறிவு ; __________ – வண்ணமயில் ; பொதுமொழி – __________

ஆ) கார்காலம் – __________ ; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை ; __________ – மார்கழி, தை.

இ) எழுத்து, சொல், __________, யாப்பு, __________

ஈ) சேரன் – வில்,சோழன் – __________, __________ – மீன்.

41. **கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் மையக்கருத்தை எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக:**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**– நாமக்கல் கவிஞர்**

42. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக:




43. **தமிழாக்கம் தருக:**

அ) The pen is mightier than the sword.

ஆ) Looking at beauty in the world is the first step of purifying the mind.

இ) You must be the change you wish to see in the world.

ஈ) Nobody can hurt me without my permission.

44. **காதுகேளாதோருக்கான மாற்று வினா:**

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வலுவான ஒற்றை வரியை நமக்குள் அழுத்தமாக பதியச் செய்தவர் திருவருட்பா தந்த வள்ளலார். அவர் அமைதி, அன்பு வழியிலான சமூகத்தை உருவாக்க விரும்பினார். ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்று தெய்வமணிமாலை, கந்தர் சரவணப்பத்து ஆகிய நூல்களை உருவாக்கினார். அவர் சாதி, சமய,

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



மத வேறுபாடுகள் கடந்து, அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார். தெய்வங்கள் பல எனச் சொல்லும் உருவ வழிபாட்டை மறுத்தார்.

**வினாக்கள்:**

அ) 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறியவர் யார்?

ஆ) வள்ளலார் எத்தனை வயதில் கவிபாடும் ஆற்றல் பெற்றார்?

இ) வள்ளலார் தோற்றுவித்த சங்கத்தின் பெயர் யாது?

ஈ) வள்ளலார் எத்தகைய வழிபாட்டை மறுத்தார்?

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3x6=18

45. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

(அல்லது)

பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

46. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

47. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

48. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

அ) 'நான் என்பாய்' எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.

***/***

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com